# ஜூலை மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.07.2016 | காலை 5.30 மணி | வாக்குத்த்த ஆராதனை | லூக்கா 12:10-32 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 03.07.2016 | காலை 8.30 மணி | திருவிருந்து ஆராதனை நற்செய்தி பெருவிழா | I அரசர்கள் 17:1 – 15 மத்தேயு 28:16 – 20 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 10.07.2016 | காலை 8.30 மணி | விசுவாசத்தில் வளர்த்தல் | யோசுவா 4 : 1 -9 மத்தேயு 1 : 35 -42 | திரு.பால் பன்னீர் செல்வம் |
| 17.07.2016 | காலை 8.30 மணி | கிறிஸ்துவின் நறுமணம் அருட்பணி | வி.பயணம் 29:1 – 9 லூக்கா 10 :1 – 11 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 24.07.2016 | காலை 8.30 மணி | திருமணம் முழுமையான நீடித்த அன்பு வாழ்வு | ஆதி 29: 1 -20 மத்தேயு 19 : 3 – 6 | திரு.A.ஜோசப் லேவீடர் |
| 31.07.2016 | காலை 8.30 மணி | திருமுழுக்கு மேன்மையான பிறப்பு | ஆதி 8:1 -14 யோவான் 3: 1 -8 | திரு.E.மனோகரன் |

## ஜூலை மாதம் - 2016

# ஆயர்மடல்

பிதா குமாரன் பரிசுத்த ஆவியான திருப் பெயரால் உங்களை வாழ்த்துகிறேன். இந்த புதிய மாதம் உங்கள் அனைவரின் வாழ்விலும் நன்மையும் ஆசிர்வாதமும் தொடர வேண்டுகிறேன். நற்செய்தி விழாவுக்காக ஜெபியுங்கள், பங்கு பெறுங்கள், கொடுங்கள்.

நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக, குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் நடைபெற்ற நமது திருச்சபையின் ஊழியங்களில் திரளாய் பங்கு பெற்றதற்காக என்னுடைய நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களில் அனைவரையும் ஈடுபடுத்தி கொள்ள அழைக்கப்படுகிறிர்கள்.

அருட்பணியில் உங்கள் ஆயர்

**Rev.Daniel Chelladurai**

July ’2016

# கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு
# எப்போதும், இயேசுநாதா, உம்மைப் பின்பற்றுவேன்
# பாமாலை – 183

**(O Jesus, I Have promised)**

“ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனால் என்னைப் பின்பற்றக் கடவன்
நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான் ”. யோவா 12:26

நமது வாழ்க்கையில் நாம் அடிக்கடி நமது நண்பர்களிடம் பல காரியங்களைக்குறித்து வாக்குறுதிகள் பண்ணுகிறோம். ஆனால் அவற்றை மிகவும் எளிதாக மீறிவிடுகிறோம். வாக்குப் பண்ணும் போதே, அதைக்காப்பாற்ற மாட்டோம் என்றும் நமக்கு தெரியும். இதைப்போலவே கடவுளிடமும் நடந்து கொள்கிறோம். நமது ஆத்மீக வாழ்க்கையில் நாம் ஏதாவது வாக்குறுதி பண்ணியது உண்டா? நாம் அதை மீறியிருக்கிறோமா?

எப்போதும், இயேசு நாதா என்னும் இப்பாடலைப் பாடுமுன், நமது இதயத்தை நாம் நன்றாகச் சோதித்தறிந்து, மனந்திரும்புதல் அடைந்திருக்க வேண்டும். கடவுளைச் சேவிப்போம் என்று வாக்குப்பண்ணுமுன், சுயநலம் சுய இச்சை முதலிய பாவங்களினின்றும் நம்மை சுத்திகரிக்குமாறு கடவுளை வேண்டிக் கொள்ளுதல் வேண்டும். விவாக ஆராதனையில் , மரணம் நம்மைப் பிரிக்குமளவும் என்று மிகவும் எளிதாக வாக்குப்பண்ணி விடுகிறோம். ஆனால் நமது மனதில், சந்தர்ப்பங்களுக்கும். வாழ்க்கையின் பற்பல நிலைமைகளுக்கும் தக்கதான ஒரு மாறுதல் தேவைப்படும் மட்டும் என்று எண்ணிக் கொள்ளுகிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் செய்த வாக்குறுதிகளைச் சிறிதும் தயக்கமின்றி அடிக்கடி மீறிவிடுகிறோம். நமது நண்பர்களுடன் செய்த வாக்குறுதிகளை மீறுவது போல. கடவுள் முன்னிலையில் செய்த வாக்குறுதிகளையும் மீறி விடுகிறோம். இப்பாடலில் சொல்லியபடி எப்போதும் இயேசுநாதா உம்மைப் பின்பற்றுவேன். என்றே தீர்மானமாக நான் வாக்குக் கொடுத்தேன் என்று நாம் பாடி விட்டு அவரது கட்டளைகளை மீறுவது கருதியாகுமா என்று சிந்தித்து பார்ப்போமாக. அப்போஸ்தலனாகிய யாக்கோபு சொல்லியபடி என் சகோதரரே. இப்படியிருக்கலாகாது . யாக் 3:19



இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் ஷயர் மாகாணத்தின் எர்னண்ட் என்னும் ஆங்கிலச் சபைப் போதகர் பதினான்கு ஆண்டுகள் திருப்பணியாற்றினார் சபையின் இளைஞரின் ஆத்துமவாழ்வில் அலர் அதிகக்கவனம் செலுத்தி சந்தார்.தமது இரு ஆண் பிள்ளைகளையும், ஒரு பெண்ணையும் அவர் சிறந்த கிறிஸ்தவ பக்தி நெறியில் வளர்த்து வந்தார். ஆங்கிலத்திருச்சபையில் இளைஞருக்கு திடப்படுத்தல் கொடுப்பதை மிகவும் முக்கியமாகக் கருதுவார். போட் போதகரது மூன்று பிள்ளைகளும் திடப்படுத்தல் பெறும் வயது வந்தவுடன் அவர் விசேஷ கவனத்துடன் திடப்படுத்தலுக்காக அவர்களை ஆயத்தம் செய்தார். அவர்கள் ஆயுள் முழுவதும் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கக் கூடிய ஒரு பாடல் அவ்வாராதனையில் பாடப்பட வேண்டுமென அவர் விரும்பி பாட்டுபுத்தகங்களில் தேடிப்பார்த்தார். அவருக்குத் திருப்தியான பாடல் உன்றும் கிடையாதலால். அவரே ஒரு பாடல் எழுதத் தீர்மானித்து எப்பொதும் இயேசுநாத என்னும் பாடலை 1869-ல் எழுதினார். அந்தத் திடப்படுத்தல் ஆராதனையில் தான் இப்பாடல் முதல் முதலாகப் பாடப்பட்டது.

இப்பாடலை எழுதிய ஜான் எர்னஸ்ட் போட் போதகர் 1816 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 – ஆம் தேதி, இங்கிலாந்தில் வண்டன் மாநகரில் பிறந்தார் புகழ்பெற்ற ஈட்டன் உயர் நிலைப்பள்ளியிலும் பின்னர் ஆக்ஸ்வர்டு பல்கலைக் கழகத்திலும் பயின்று பி.ஏ., பட்டங்களைப் பெற்றார். ஆறு ஆண்டுகள் ஆக்ஸ்வர்டு பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகப் பணியாற்றினார். 1841 -ல் அவர் குருப்பட்டம் பெற்று வெஸ்ட்வெல் என்னுமிடத்தில் போதகராக நியமனம் பெற்றார். 1860 முதல் அவர் காஸில் காம்ஸ் என்னுமிடத்தில் ஸ்தலகுருவாகப் பணியாற்றிவந்தார். இங்கு பணியாற்றும் போதுதான் எப்போதும் இயேசு நாத என்னும் பாடலை எழுதினார். தமது வாழ்க்கையில் அவர் ஏராளமான உபந்நியாசங்கள் செய்து. அவற்றைப் புத்தகங்களாக வெளியிட்டார். மேலும் கிறிஸ்தவப்பாடல்களும், செய்யுள்களும் கொண்ட மூன்று புத்தகங்கள் எழுதியுள்ளார். அவர் எழுதிய இதர பாடல்கள் தமிழில் மொழிபெயர்க்கப் படவில்லை.

எர்னஸ்ட் போட் போதகர் 1874 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ஆம் தேதி தமது 58– வது வயதில் காஸிஸ் என்னுமிடத்தில் காலமானார்.

**- Nishada’s**

ஆதாரம்:
1.கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு – **Mr.D.EBENKAN**
2. Various internet articles

## சங்கீதம் – ஒரு அலசல்

## சங்கீதம் – 51

### பிழை உணர்தலின் சங்கீதம்

பாவத்திலே பிறந்து பாவத்தில் வாழுகின்ற மனிதன் அதை உணர்ந்து அதிலிருந்து தன்னை விடுவித்து கொள்ள வேண்டும் என்பதை புரிய வைக்கும் சங்கீதம் இது. பாவம் செய்கிற ஆத்துமா சாகும். "பாவத்தின் சம்பளம் மரணம்", "நீதிமான் ஒருவனும் இல்லை ". இவைகள் இறை வாக்குகள்

நாத்தான் வேலால் தன்னுடைய தவறு உரைக்கப்பட்ட போது தாவீது அரசன் மனம் வருந்துகிறான். வசனம் 3.4 இல் தான் செய்த பாவம் அவன் கண்களுக்கு முன்பாக வசனம் 7 இல் இதை அறிக்கையிட்டு மன்னிப்பும் கேட்கிறான், உம் கண்களுக்கு முன்பாக பொல்லாங்கானதை நடப்பித்தேன் என்று கூறுவதை வாசிக்க முடிகிறது வசனம் 7 இல் இதை அறிக்கையிட்டு மன்னிப்பும் சேட்கிறான். நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும் அப்போழுது நான் சுத்தமாவேன். என்னைக் கழுவியருளும் அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன் என்றும் என் பாவங்களை பாராத படிக்கும் உம் முகத்தை மறைத்து என் அக்கிரமங்களை எல்லாம் நீக்கியருளும் என்று ஆண்டவரிடம் கேட்பதை படிக்கிறோம். இங்கு லூக்கா 15 இல் இளைய குமாரனின் அறிக்கையை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் ஆண்டவர் நம்மிடம் எதை விரும்புகிறார் என்பதையும் தாவீது எடுத்துரைக்கிறார். வசனம் 6ல் இதோ உள்ளத்தில் உண்மை இருக்க விரும்குகிறீர் என்கிறார். வசனம் 10இல் சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் என்கிறார். வசனம் 17இல் தேவனுக்கேற்கும் பலிகள் நோறுங்குண்ட ஆவிதான் என்கிறார் வசனம் 19ல் அப்பொழுது தகன பலியும் சர்வாங்க தகன பலியான நீதியின் பலிகளில் பிரியப்படுவீர் என்கிறார். ஆண்டவர் விரும்பும் இந்த காரியங்கள் நம்மிடம் இருக்கிறதா?

1. உண்மை
2. சுத்த இருதயம்
3. நொறுங்குண்ட ஆவி
4. நீதியின் பலிகள்

நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.



ஆண்டவர் தன்னை மன்னித்து ஏற்று கொள்ளும்போது சாட்சியின் வாழ்கை வாழுவேன் என்று அறிக்கையிடுகிறார். வசனம் 12, 13 இல் உமது ரட்சிப்பின் சந்தோஷத்தை திரும்பவும் எனக்கு தந்து உற்சாக மான ஆவி என்னை தாங்கும் படி செய்யும் அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன் பாவிகள் உம்மிடத்தில் மனம் திரும்புவார்கள் என்று அறிக்கையிடுவதை பார்க்கிறோம் வசனம் 14.15 இல் என் நாவு உம்முடைய நிதியைப் கெம்பீரமாய் பாடும் என்றும் என் வாய் உம்முடைய புகழை அறிவுக்கும் என்றும் கூறுகிறார்.

சங்கீதக்காரனின் இந்த வார்த்தைகள் நம்மை சிந்திக்க வைக்கிறதல்லவா? இன்று நம் நிலை என்ன?

சிந்திப்போம்.<br>
உணர்வோம்.<br>
அறிக்கையிடுவோம்.<br>
மன்னிப்பை பெறுவோம்.<br>
மகிழ்ச்சி அடைவோம்.<br>
சாட்சியாக வாழ்வோம் தாவீதை போல...

- Mrs.Stella Gunaseeli

## நற்செய்தி பெருவிழா

நாள்: 03.07.2016, நேரம்: காலை 8.30 மணிக்கு

இடம்: சபை வளாகம்

**சிறப்பான திண்பண்டங்கள், காலை உணவுகள், மற்றும் விளையாட்டுக்கள்.**

அனைவரும் வருக! இறை ஆசிர் பெறுக!!

# வேத வினா - விடை போட்டி

**ஜூலை மாத கேள்விகள்**

**முழு வேதாகமம் ( வசன ஆதாரம் தரவும் )**

**பின் வரும் சம்பவங்கள் எங்கே நடந்தன?**

**(நடந்த இடமும் வசன ஆதாரம் தரவும்)**

1. எத்தியோப்பிய சேனை யூதாவுடன் யுத்த பண்ண வந்த இடம்?
2. சாலமோன் இராஜா யுத்தம் பண்ணின இடம்?
3. ராட்சதன் சிப்பாயி கொல்லப்பட்ட இடம்?
4. எஸ்போனின் ராஜா சீகோனை, கர்த்தர் இஸ்ரவேலரிடம் ஒப்பு கொடுத்த இடம்?
5. யோவாஸ் ராஜாவாக முடிசூட்டப்பட்ட இடம்?
6. "இது கடினமான உபதேசம் யார் இதை கேட்பார்கள்" - என்று சொல்லப்பட்ட இடம்?
7. ஸ்தேவானின் முகம் தேவதூதன் முகம் போலக் காணப்பட்ட இடம்?
8. மரியாள் இயேசுவின் பாதங்களில் தைலம் பூசி தன் தலை முடியால் துடைத்த இடம்?
9. மக்கெதோனியாவுக்கு போகச் சொல்லி பவுலுக்கு இரவில் கிடைத்த தரிசனம் நடந்த இடம்?
10. 1000+ 50 + 530 + 20,000 + 2,200 + 20,000 + 2000 + 67 = ?

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-07-2016**

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி


**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**

எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை - 600 099.


குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்


csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**


## பாராட்டுகிறோம்!

நமது உறுப்பினர் திரு. G.K.டேவிட் & திருமதி கிறிஸ்டி டேவிட் அவர்களது மகன் திரு. சாலமோன் & ஸைலஸ் லாரா திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



# சென்ற மாத போட்டியின் விடைகள்

1. II நாளாகமம் 24: 22
2. II நாளாகமம் 19:11
3. யோனா 4:4,9
4. ஆபகூக் 2 : 3
5. மத்தேயு 8 : 29
6. யாத்திரகமம் 10: 7
7. ஆதியாகமம் 26 : 16
8. காலத்தியர் 2 : 21
9. லூக்கா 1: 3
10. எஸ்றா 8 : 24 - 28

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கலா சுந்தரகுமார்
3. திருமதி. ஜாய்ஸி விமலா
4. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
5. திருமதி. ஷைனி ரிச்சர்ட்
6. திருமதி. ஸ்டெல்லா ராஜ்
7. திருமதி. லீலா டிக்சன்
8. திருமதி. மெரில் ஜஸ்டின்
9. திருமதி. ஜூபிலி தர்மராஜ்
10. திருமதி. ரோஸ்லெட் செல்வன்
11. திருமதி. புஷ்பா ஞானராஜ்

### படித்ததில் பிடித்தது

விமான நிலையத்திற்கு செல்கிறோம்
3 மணி நேரத்திற்கு முன்பாக........
இரயில் நிலையத்திற்கு செல்கிறோம்
2 மணி நேரத்திற்கு முன்பாக........
பேருந்து நிலையம் செல்கிறோம்
1 மணி நேரத்திற்கு முன்பாக........
அலுவலகம் செல்கிறோம்
அரை மணி நேரத்திற்கு முன்பாக........
ஆனால் இயேசு ஆராதிக்க ஆலயத்திற்கு செல்கிறோம்
எத்தனை மணி நேரத்திற்கு முன்பாக ........?

**A.Joseph**

## BIRTHDAYS IN THE MONTH OF JULY

| | |
|---|---|
| July 2 | Mrs. R.Gayathri |
| July 3 | Mrs. S.Chandra |
| July 5 | Miss. A. Niha Nirliptha |
| July 6 | Mr. Joshua Daniel |
| | Mrs. Esther |
| July 7 | Mr.Jacob Theodre |
| | Mr. P.Parthiban Prasad |
| July 8 | Mr. M.Gladwin Prabhakar |
| | Mr. S. David Nirmal Raj |
| July 9 | Mrs. K.S.Mary Jeni Suji |
| | Mr. S.Shobana Mala |
| July 10 | Mr.N.Sam Yesudhas |
| July 11 | Mrs.Preethi Manoj |
| July 12 | Mr.R. Jesudas |
| | Mr.R. Lalith Kumar |
| July 13 | Master.Ashwin |
| July 15 | Mrs.Shalini Kalai Arasan |
| July 16 | Miss. Harriet Jenifer |
| July 18 | Mrs. Excelda Selva Kumari |
| | Mrs. Magdalene Luxon |
| July 19 | Miss.Norrin Marcus |
| | Master.R. Chrysoprase Samuel |
| July 20 | Mrs. G.Evangelin Lincy |
| | Mr.Stanley Davis |
| July 21 | Mr. E.B.Anbazhagan |
| | Mr. S.Shobana Mala |
| | Baby. Charlene Bettina |
| July 24 | Mr. Melstin Jeno |
| July 25 | Mrs. R.Godwin Shiny |
| | Miss. Alef Belicia .R |
| July 26 | Mr.Joseph Raj |
| July 27 | Mr.P.David |
| | Miss.Diya Jane |
| | Master. J.Ricky Matthew |
| July 29 | Mr.J.Brelin Jose Raj |
| | Mr.A. Joseph |
| July 31 | Miss. Jenifer Sherline Salomy |
| | Baby Joanna Celicia |

## WEDDING DAYS IN JULY

| | |
|---|---|
| July 1 | Mr. V. Robin Bennet Singh & Mrs. Ieema Rose |
| July 5 | Mr. Hongton Kalai Arasan & Mrs. Shalini Kalai Arasan |
| July 9 | Mr.G.R.Clement & Mrs. M.Sharmila |
| July 10 | Mr. V.R. Freddy Paul Raja & Mrs. V.Merline |
| July 11 | Mr. B.Manoj Samuel Aaron & Mrs. Preethy Manoj |
| July 12 | Mr. Paul Panneer Selvam & Mrs. Manju Violet Elizabeth' |
| | Mr.T. Raju Daniel & Mrs.E.Stella Raju |



**பிறந்த நாள் மற்றும், திருமண நாள் கொண்டாடும்**
**அனைவருக்கும் திருச்சபையின்**
**சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



## திருச்சபையும் - நற்செய்தி பணியும்

### கடமையில் கண்ணியம்

டேவிட் செல்லப்பா



25.08.1964 - 05.02.1905

தூய பவுல் பள்ளி இது சென்னையில் உள்ளது. இதன் தலைமை ஆசிரியாராக 18 ஆண்டுகள் பொறுப்பேற்று நடத்திய பின் பேராயராக தென்னிந்தியத் திருச்சபையை நடத்தியவரே டேவிட் செல்லப்பா.

தலைமையாசிரியாராக பணியாற்றியக் காலம் ஒரு முறை பள்ளித் தமிழ் இலக்கிய மன்ற சிறப்பு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. கல்வித்துறை அமைச்சர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். விழா தொடங்க வேண்டிய நேரத்தில் அமைச்சர் வருகை தரவில்லை எனவே பொறுமையுடன் காத்திருந்த மாணவர்கள் வீட்டிற்கு அனுப்பபட்டனர். காலம் கடந்து வந்த அமைச்சருக்கு செய்தி அறிவிக்கப்பட்டது. அமைச்சர் திரும்பிச் சென்று விட்டார். உடனடியாக அரசு உதவித் தொகை நிறுத்தப்பட்ட செய்தி ஆணையாக வந்தது.

டேவிட் செல்லப்பா இதனைக் கண்டு மனம் தளரவில்லை, உடனே விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்தார். காலம் தவறாமையைப் போதிக்கின்ற நாங்கள், பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தினார்.

அமைச்சர் தன் தவறை உணர்ந்தவராக நிறுத்தப்பட்ட உதவித் தொகையை வழங்கிய தோடு அடுத்த ஆண்டு நடைபெற்ற இலக்கிய மன்ற நிகழ்ச்சியில் சரியான நேரத்தில் கலந்து கொண்டார்.

பேராயர் செல்லப்பா அவர்கள் பேணிக் காத்தவை ஒழுக்கம், காலந் தவறாமை எனும் இரு பண்புகளாகும். திருச்சபைகளில் இவைகளைத் திறம்பட வலியுறுத்தினார். பணிகளில் நேர்மையுடன் கடமையாற்றுபவர்களின் நண்பராக அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்று உபசரித்தார்.

சென்னைப் பேராயத்தின் சிறந்த பேராயராக விளங்கிய இவர். சிறந்த செயல் வீரர் அவருடைய எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் சிறப்பு பெற்றவையாகும்.

அன்பரே! கடமையும், காலந்தவறாமையும் உங்களிடம் உள்ளதா?

தொகுப்பு: திரு. பால்பன்னீர் செல்வம்

# நீதிமொழியின் நீதி போதனைகள்

நீதிமொழிகளின் தேவன், நீதி அரசனின்
நீதி வழுவா நன்நெறிகள்

நீதிமொழிகள் வாழ்வின் வழிகளை
நிதானமாய் நின்றுரைக்கின்றது

வாலிபனே உன் வழியை காத்துக்கொள் – என
வாலிபனுக்கு வழியயையும் வகுத்தளிக்கும் வழிப்போக்கன்

தகப்பனின் புத்தியை கேள் தாயின் போதகத்தை தள்ளாதே
தடையின்றி வாழ்வில் முன்னேறுவாய்

நீ தயக்கம் கொள்ளும் போது தந்தையைப் போல
ஆறுதலையும் தாயை போல அன்பையும் காட்டுவது

நமக்கு செம்மையாய் தோன்றுகின்ற வழிகள் தேவனுக்கு
பிரியமில்லாமல் போகும் போது விட்டுவிடு

கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் – நீ
அசிர்வதிக்கப்பட தேவனை அண்டிக்கொள்

தேவன் உன்னை மற்க்காமல் இருக்க – நீ
தேவனை மறக்காமல் நேசி

தேவ ஞானத்தை கவனித்து அவர் புத்திக்கு
செவி கொடுப்பாயானால் அவர் உன்னை நேசிப்பார்



அவர் உன் வேண்டுதலுக்கு செவி கொடுப்பார்
உன் எதிர்காலம் செழிக்கச் செய்வார்

நல்ல மகன் தன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான்
தேவனும் அதில் பிரியப்படுகிறார்.

கர்த்தரின் ஆசிர்வாதமே ஐஸ்வரியத்தை தரும்
மனிதனின் ஆசிர்வாதம் மறைந்து போகும்

உன் நம்பிக்கையை கர்த்தரிடத்தில் வை – உலகத்தின் மேலும்
உன்னை சார்ந்தோர் மேலும் வைக்காதே

புத்தியுள்ள ஸ்திரி தன் வீட்டை கட்டுவது போல
புதிய நன்மைகளை பெற புகழ்மிக்க நம் தேவனை துதி

உஷ்ணகாலத்திலே உறைந்த பணியும், அறுப்பு காலத்திலே
மழையும் தகாதது போல

கூட்டை விட்டு அலைகிற குருவியைப் போல இல்லாமல்
தேவன் உயர்த்தும் காலம் வரை அவரது கைக்குள் அடங்கியிரு

உன் செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவிக்கும் போது – உன்
யோசனைகளும் உறுதிப்படும் நீயும் உயர்த்தப்படுவாய்.

ஆக்கம்..
**பா.ஏவாள் மோனா மெட்டில்டா** M.A,B.Ed.,
சி.எஸ்.ஐ. தொடக்கப் பள்ளி, புழல்